# 2040க்குள் காடுகளை நிலைப்படுத்த கோலாலம்பூர் மாநகர் மன்றம் இலக்கு!



## -டாக்டர் சலேஹா முஸ்தபா

**(நமது நிருபர்)**

கோலாலம்பூர், ஜூன் 23–

கோலாலம்பூர் முழுவதும் வரும் 2040ஆம் ஆண்டுக்குள் நடப்பிலுள்ள காடுகள், பொழுது போக்கு இடங்களை நிலைப்படுத்தி 100 விழுக்காடு வரை அதிகரிக்க 2040 கோலாலம்பூர் கட்டமைப்புத் திட்டத்தின் வாயிலாக மாநகர் மன்றம் இலக்குக் கொண்டுள்ளது என்று கூட்டரசுப் பிரதேசத்திற்கான பிரதமர் துறை அமைச்சர் டாக்டர் சலேஹா முஸ்தபா தெரிவித்தார்.

இதில் பசுமை இடங்களாக மாற்ற ஒரு குடியிருப்பாளருக்கு 20 சதுர மீட்டர் திறந்த நிலப்பரப்பின் விகிதம் பசுமைப் பகுதியாகப் பயன்படுத்துவதற்கும் மாநகர் மன்றம் இலக்குக் கொண்டுள்ளது.

இது உலகச் சுகாதார நிறுவனம் (டபள்யூ.எச்.ஓ.) நிர்ணயித்த மிகச் சிறந்த நடைமுறை இலக்கிற்கேற்ப உள்ளது. கோலாலம்பூரில் வளர்ச்சித் திட்டமிடலை மேம் படுத்தும் முயற்சியில் நிலத்தைப் பயன்படுத்தும் முயற்சிகளில் தலைநகரிலுள்ள ஒட்டு மொத்த 9.16 விழுக்காட்டு நிலத்தில் திறந்த நிலத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் கவனமாகவும், நிலையானதாகவும், போட்டித்தன்மையுடனும் செயல்படுத்தப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன்.

அந்த வகையில் இனி வரக்கூடிய மேம்பாட்டுத் திட்டங்கள் மிகவும் திட்டமிடப்பட்ட, பயனுள்ள மற்றும் நகரத்தின் குடிமக்களின் வாழ்க்கை, நல்வாழ்வில் நேர்மறையான சமூகப் பலன்களைக் கொடுக்கும் வகையில் இருப்பதை உறுதி செய்ய சமூகத் தாக்க மதிப்பீட்டு நடைமுறை வழிகாட்டுதல்களை தயாரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக சிறப்பு உள்ளூர் மைய கூட்டத்திற்குத் தலைமையேற்றப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது செகிஜாங் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் சலேஹா முஸ்தபா குறிப்பிட்டார்.